***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 206/2024 – P.W. 7 (LW-8)***

| | |
|---|---|
| *Name* | மருத்துவர் சுகந்தபிரியா(மன்னார்குடி) |
| *Father/Husband's Name* | சரவணக்குமரன் |
| *Village* | அரசு மருத்துவமனை மன்னார்குடி |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *40* |

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 11.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது திருவெரும்பூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.09.2024 ம் தேதி மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றியபோது இரவு 10.15 மணியளவில் 45 வயதுடைய செல்லப்பா என்ற நபரை அவரது உறவினரான பட்டாபிராமன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நான் அவரை பரிசோதித்தபோது, அடையாளம் தெரிந்த 3 நபர்களால் அன்றைய தினம் இரவு 9.30 மணிக்கு வீட்டின் எதிரில் மண்வெட்டியால் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது 1. இடது பக்கம் முதுகின் மேல்பகுதியில் 6x3x2 செ.மீ. அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. 2. வலது பக்கம் முதுகின் மேல்பகுதியில் 6x2 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு சிகிச்சையளித்து விபத்து பதிவேடு பதிவு செய்து, AR 2201442 உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அவர் 15.09.2024-ம் தேதியன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு நெஞ்சுபகுதியில் எக்ஸ்ரே எடுத்து பார்த்தபோது நார்மலாக இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை பொறுத்து 03.10.2024-ம் தேதியன்று சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்தபோது ஆயுதத்தை என்னிடம் காண்பித்து விசாரித்தார்களாக என்றால் இல்லை. காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது என்னிடம் சொன்ன நேரத்திற்கு முன்போ, பின்போ ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். காயம்பட்ட நபர் தடுமாறி கூர்மையான மற்றும் கல் போன்ற ஆயுதத்தில் விழும்போது மேற்சொன்ன காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 11.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.